முச்சந்தி முரளி



"புத்தாண்டுப்பரிசா
அரசாங்கம் சனத்துக்கு
விலையேத்தி
மறக்கமுடியாத பரிசு
குடுத்திருக்கு
கண்டியளோ"


Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 37

செவ்வாய்க்கிழமை
02 ஜனவரி 2024

ர்கழி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054



# டெங்குத் தொற்றாளர்கள் டிசெம்பரிலேயே அதிகம்

## 2 ஆயிரத்து 144 பேருக்குத் தொற்று
## மருத்துவக் கலாநிதி கேதீஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 2
யாழ். குடாநாட்டில் கடந்த ஆண்டு 4 ஆயிரத்து 313 பேர் டெங்குத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 144 பேர் கடந்த டிசெம்பர் மாதத்திலேயே தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.
டெங்குத் தொற்றாளர்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதன் காரணமாக மருத்துவமனைகளில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை 11

## எரிவாயு, எரிபொருள் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 2
நாட்டில் நேற்று முதல் லிட்ரோ சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் விலைகள் என்பன அதிகரிக்கப்பட்டுள்ளன.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுக்காலை 5 மணி முதல் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது. 11

## புத்தாண்டு பரிசாக கெஹலியவுக்கு மலர்வளையம்

கொழும்பு, ஜன. 2
முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டின் முன்பாக, புத்தாண்டான நேற்று மலர்வளையம் வைக்கப்பட்டுள்ளது. 11



# எதிரணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவே!

## இறுதியான முடிவு எட்டப்பட்டது
## டிலான், பீரிஸ் கூட்டாக அறிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 2**
**ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி கூட்டணியின் பொது வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே களமிறங்குவார். இறுதியான - உறுதியான முடிவு எட்டப்பட்டுள்ளது - என்று சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா ஆகியோர் நேற்று கூட்டாக அறிவித்தனர்.** 11

# 8 தடவைகள் கருச்சிதைவு புத்தாண்டில் குழந்தை பிறப்பு!

## பருத்தித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை, ஜன. 2
தொடர்ச்சியாக எட்டுத் தடவைகள் கருச்சிதைவு ஏற்பட்ட தாய் ஒருவருக்கு ஆரோக்கியமான முறையில் நேற்று புத்தாண்டு நாளில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் குழந்தை பிறந்துள்ளது.
24 வயதான மேற்படி தாயார் திருமணம் முடித்த காலத்தில் இருந்து தொடர்ச்சியாக எட்டுத்தடவை கருச்சிதைவு ஏற்பட்டது, அதன் பின்னர் தாயார் கர்ப்பத்துக்கு முன்னரும் கர்ப்ப காலத்திலும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 11

## நாட்டின் இழிநிலைக்கு காரணம் இனவாதமே!

### அநுரகுமார கருத்து

கொழும்பு, ஜன. 2
குறுகிய காலத்துக்கு பதவிக்கு வருவதற்கு விதைத்த இனவாதமே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 11



# விமர்சனங்களை முன்வைத்தாலும் தீர்மானங்களை மாற்றமாட்டேன்!

## ரணிலின் புத்தாண்டுச் செய்தி

கொழும்பு, ஜன. 2
சரியான தீர்மானங்களுடன் ஆண்டிறுதிக்குள் இலங்கையை துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கிக் கொண்டுச் செல்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரம 11

## திட்டங்களில் மாயமான உயர் பாதுகாப்பு வலயம்

யாழ்ப்பாணம், ஜன. 2
வலி. வடக்குப் பிரதேசத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படும் திட்ட விவரங்களில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் அடையாளப்படுத்தப்படாமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், நகர அபி 11

## தனித்திருந்த மூதாட்டியின் வீட்டுக்குள் புகுந்து திருட்டு


யாழ்ப்பாணம், ஜன. 2
சண்டிலிப்பாயில் தனித்திருந்த 80 வயது மூதாட்டியின் வீட்டுக்குள் புகுந்து நகை மற்றும் பணம் என்பன அபகரிக்கப்பட்டுள்ளன.
வீட்டில் மூதாட்டி நேற்றுமுன்தினம் நித்திரையில் இருந்தபோது அவரது காதிலிருந்த அரைப் பவுண் தோடு, வீட்டிலிருந்த வானொலிப்பெட்டி, எரிவாயு 11

## வடக்குக்கு வரும் ரணில் பல தரப்பினருடனும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் 4 நாள் பயணமாக வடக்குக்கு வரவுள்ளார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்கரையில் இரும்பு மிதவை ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை காலை கரையொதுங்கியுள்ளது. இரும்பாலான இந்த மிதவை இரு தொகுதிகளாகத் தயாரிக்கப்பட்டு இரும்புச் சட்டங்கள் மூலம் இணைக்கப்பட்டு நடுவில் 'தொங்குவளையங்கள்' பொருத்தப்பட்ட இரும்புத்தூண் அமைப்புடன் காணப்படுகின்றது. (எ-100)

# 13,000 ஏக்கர் நெற்செய்கை மழை வெள்ளத்தால் அழிவு

## கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரம் விவசாயிகள் பாதிப்பு

**கிளிநொச்சி, ஜன.2**

**கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக 13 ஆயிரத்து 897 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை அழிவடைந்துள்ளது என்று மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளம் மற்றும் இரணைமடுக் குளத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீர் காரணமாக நெற்செய்கை அழிவடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாகத் திரட்டப்பட்ட தகவலுக்கு அமைய 13 ஆயிரத்து 897 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது. 4 ஆயிரத்து 461 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, இராமநாதபுரம், அக்கராயன்குளம், முழங்காவில், கண்டாவளை, பரந்தன், பூநகரி, புளியம்பொக்கணை, உருத்திரபுரம், பளை ஆகிய கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்தப் பயிரழிவு ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-113)

## மீண்டும் தலைதூக்கும் பாதீனியச் செடிகள்

### விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்து வரும் மழையையடுத்து மீளவும் பாதீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தாவிடின் விவசாயச்செய்கை பாதிப்புறும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் பாதீனியச் செடிகள் பெருகிக் காணப்படுகின்றன. வலி.கிழக்கு, வலிகாமம் மற்றும் யாழ்.கோட்டைச் சுற்றாடல் போன்ற பகுதிகளில் பாதீனியச் செடிகள் பெருமளவில் வளர்ந்து காணப்படுகின்றன. இவை விவசாய நிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் மறுபுறத்தில் அவற்றால் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளன. பாதீனிச் செடிகளை அழிக்க உரிய விவசாயத் தரப்புகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-17)

## கடலுணவு, மரக்கறி விலைகள் உச்சம்!

யாழ்ப்பாணம், ஜன.2

கடலுணவுகள் மற்றும் மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்துள்ளதால் நுகர்வோர் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் கத்தரிக்காய், பயிற்றங்காய், பாவற்காய், தக்காளி, போஞ்சி போன்றன கிலோ 600 ரூபாவையும் தாண்டியுள்ளன. பச்சை மிளகாய் கிலோ ஆயிரத்து 400 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கடலுணவுகளின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளன. கொட்டடி, நாவாந்துறை, குருநகர், பாஷையூர், கல்வியங்காடு உள்ளிட்ட மீன்சந்தைகளில் அவற்றின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன என்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (ச-17)

## ஆனைவிழுந்தானில் தடுப்பணை வேண்டும்

### மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான்குளம் கிராமத்துக்குள் மழை வெள்ளம் வராமல் தடுப்பணை அமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான்குளம் குடியேற்றத் திட்டத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆண்டுதோறும் மழைக்காலத்தில் வன்னேரிக்குளம் அக்கராயன் வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் காட்டு வெள்ளம் கிராமத்துக்குள்ளும் ஊடுருவி பெரும் சேதங்களை ஏற்படுத்துகின்றது. ஆதலால், வெள்ளத்தால் வரும் இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காகவும் வெள்ளம் நேராகக் குளத்தை அடைவதற்கு ஏதுவாகவும் அணைக்கட்டை அமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-13)

## வெள்ளை ஈக்கள் தாக்கம் தென்னைகள் அவதானம்!

யாழ்ப்பாணம், ஜன. 2

சீரற்ற காலநிலை காரணமாக தென்னைகளில் வெள்ளை ஈ தாக்கம் மீளவும் ஏற்பட்டு வருகின்றது என்று தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள சில தென்னைகளில் இந்த வெள்ளை ஈ தாக்கம் காணப்படுகின்றது. இந்தத் தாக்கத்தை உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்னைகளில் இந்தத் தாக்கம் காணப்படின் உடன் தென்னை அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-17)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் ஆற்றவுள்ளார். (ம)

## குருதிக்கொடை

யாழ்., ஜன. 2

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு தொண்டைமானாறு பொது நோக்கு மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணி முதல் மதியம் ஒருமணி வரை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களை இரத்ததானம் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ரி-100)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்கக் கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 2

நீர்வேலி, கோப்பாய்ப் பிரதேசங்களில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்று கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

நெற்பயிர்கள் தற்போது கதிர் வரும் நிலையில் காணப்படுகின்றன. சிலர் தமது கால்நடைகளை வயல்நிலங்களை அண்டிய பகுதிகளில் மேய்ச்சலுக்காக விட்டுச் செல்கின்றனர். இதனால் அவை வயல் நிலங்களுக்குள் புகுந்து நெற்பயிர்களை மேய்கின்றன. எனவே, கால்நடைவளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்காவிடின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கமக்கார அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (ச-17)

## நந்திக் கடலைத் தூய்மையாக்க கடற்றொழிலாளர் கோரிக்கை

வன்னேரிக்குளம், ஜன. 2

முல்லைத்தீவு - நந்திக்கடலை ஆழமாக்கும் விடயத்தில் நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றோம் என்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு போர்க்காலத்தின்போது நந்திக்கடற் சூழலில் அமைக்கப்பட்ட மண் அணைகள் கடலுடன் கலந்தமையால் பெருமளவு சேறு நந்திக்கடலில் உருவாகியிருந்தது. முத்தையன்கட்டுக்குளம், மதவாளர்சிங்கம்குளம், முறிப்புக்குளம் என்பவற்றின் வெள்ள நீர் நந்திக்கடல் வழியாகவே பெருங்கடலில் கலக்கின்றது. எனவே சீரான மீன்பிடியைக் கருத்திற்கொண்டு நந்திக்கடலை ஆழமாக்கித் தர வேண்டும் என்று மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டில் ஆரம்பித்தது அரசியல் குத்துக்கரணம்!

கொழும்பு, ஜன.2

2024 ஆம் ஆண்டு தேர்தல் வருடமென கருதப்படும் நிலையில் வருட ஆரம்பத்திலேயே 'அரசியல் குத்துக்கரணமும்' ஆரம்பமாகியுள்ளது.

வருடத்தின் முதல் கட்சி தாவலாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்திய அவர், ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்துவத்தைப் பெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பலாங்கொட தொகுதி பிரதம அமைப்பாளர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்மாகாணசபையின் முதலமைச்சராக செயற்பட்டுள்ளஷான் விஜயலால் த சில்வா, ஆளுநர் பதவியையும் வகித்துள்ளார். (எ-44)

# இலங்கை வெல்ல சீனா வேண்டும்

## ஜப்பான் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.2**

**சீனாவின் பங்களிப்பு இன்றி கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் இலங்கை வெற்றி பெறுவது கடினமானது என்பதை ஜப்பான் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குநராக சீனா உள்ளமையே இதற்குக் காரணமென ஜப்பான் தெரிவித்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உத்தரவாதங்கள் இன்றி, சர்வதேச நாணயநிதியத்திடம் இருந்து இலங்கைக்கு முழுமையான நிதி வசதியைப் பெறமுடியாது என நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுத் தலைவர் பீட்டர் ப்ரூவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளார்.

இருப்பினும், கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக பரிஸ் கிளப்புடன் இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உடன்பட்டுள்ள நிலையில், சீனாவின் நிலைப்பாடு மாறாகக் காணப்படுகின்றது.

உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற 12 பில்லியன் அமெரிக்க டொலர் கடனில் சுமார் 4 பில்லியன் டொலரை மட்டுமே மறுசீரமைக்க சீனா விருப்பம் தெரிவித்திருந்தது. இருப்பினும், அதற்கு எவ்வாறான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து சீனா இன்னும் வெளியிடவில்லை.

அந்த நிபந்தனைகள் வெளியிடப்படும் வரை இந்தியா, ஜப்பான் மற்றும் பரிஸ் சமூகம் போன்றவை தங்கள் ஒப்பந்தத்தை முறையாகச் செயற்படுத்தப்போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# வலை வீசும் திலங்க

கொழும்பு, ஜன.2

சுதந்திர மக்கள் காங்கிரஸில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை இணைத்துக்கொள்ளும் முயற்சிகளில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திலங்க சுமதிபால ஈடுபட்டுள்ளார்.

எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் சுதந்திர மக்கள் காங்கிரஸ் முன்னெடுக்க உள்ள வியூகங்கள் தொடர்பில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ குணசேகரவுடன் திலங்க சுமதிபால கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளாரென்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய மறுத்த தயாசிறி

கொழும்பு, ஜன.2

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தைப் பெற்று அந்தக் கட்சியுடன் இணையப்போவதில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடைநிறுத்தியுள்ளது. அத்துடன், மாவட்ட தலைவர், அமைப்பாளர் பதவி என்பனவும் பறிக்கப்பட்டுள்ளன.

சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று சஜித்துடன் இணைந்துள்ள நிலையில், தயாசிறியும் இணையக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆயினும் தான் சுதந்திரக்கட்சியை விட்டு வேறு எங்கும் போகப்போவதில்லை என தயாசிறி ஜயசேகர அறிவித்துள்ளார்.

ஆயினும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையும் அரசியல் கூட்டணியில் ஒரு பங்காளியாக தயாசிறி இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-44)

## வற்வரி தொடர்பாக

# தவறான கருத்துகளை கூறினால் சட்டம் பாயும்

## சாகல எச்சரிக்கை

கொழும்பு, ஜன.2

வற்வரி திருத்தம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் மக்கள் மத்தியில் தவறான கருத்துகளைப் பரப்புகின்றனர் என்று ஜனாதிபதி பணிக்குழாமின் தலைமைப்பணிப்பாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வரித் திருத்தங்கள் குறித்து பொய்யான அறிக்கைகளை வெளியிடும் தரப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தவறு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். வற்வரி தொடர்பில் போலியான செய்திகளைப் பரப்பி வருகின்றனர். மக்களைத் தூண்டிவிட்டு குழப்பம் விளைவிப்பவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)




முதல் கோணல் முற்றும் கோணலாத்தான் முடியிறது. எங்களுக்கு இந்தமுறை புதுவருசமும் கோணலாத்தான் விடிஞ்சிருக்குது. வழக்கமா ஒவ்வொரு மாதமும் நாலாம் திகதிதான் பெற்றோல், டீசல் விலையை அரசாங்கம் அறிவிக்கிறது. ஆனால் இந்தமுறை முதலாம் திகதியே அறிவிச்சு எல்லாருக்கும் ஒரு 'சர்ப்பிரைஸ்ட் கி.்.ப்ட்' குடுப்பமெண்டு அரசாங்கம் நினைச்சிருக்கு. ஆனால் அந்த அரசாங்கத்துக்கே 'சர்ப்பிரைஸ்ட் கி.்.ப்ட்' குடுத்திருக்கினம் எங்கட பெற்றோல் செற்காரர். இந்த வருசம் முதலாம் திகதியோட வற் வரி ஏறப்போகுதெண்டதால, எப்பிடியும் பெற்றோல் , டீசல் விலையும் நாப்பது, அம்பது ரூபாவால கூடும் எண்டது செற்காரருக்கு நல்லாவே தெரியும். அதால முந்த நாள் பின்னேரத்தோட 'பெற்றோல் இல்லை' எண்டு செற்றுக்கு முன்னால எழுதிக் கட்டிப் போட்டினம். ஏனெண்டால் விடியும் வரைக்கும் இருக்கிற பெற்றோலையோ, டீசலையோ விக்காமல் வைச்சிருந்தால், பிறகு ஒவ்வொரு லீற்றருக்கும் நாப்பது ரூபா மேலதிக லாபம் பாக்கலாமெல்லோ. அதுக்குத்தான் இப்பிடி பெற்றோலைத் தாராளமா வைச்சுக்கொண்டு, செற்காரர் 'பெற்றோல் இல்லை' எண்டு கையை விரிச்சவை.

ஆனால் 'ராங்குக்குள்ள' வழிய வழிய பெற்றோல் இருக்கு எண்டு சனத்துக்கும் தெரியும். அரை மணித்தியாலத்துக்கு முதல் பவுஸர்ல வந்திறங்கின பெற்றோல் அதுக்குள்ள எப்பிடி வத்தியிருக்கும்? ஆனாலும் செற்காரர் இல்லையெண்டு சொன்னால் , அவையைத் தள்ளிவிழுத்திப்போட்டு உள்ளுக்க போய், பெற்றோல் 'ராங்க்கை' செக் பண்ண முடியுமோ? அதால எல்லாரும் முந்தநாள் எல்லா செற்றுக்கும் போறதும், 'இல்லை' எண்டதைக் கேட்டுத் திரும்பி வாறதுமா இருந்தவை. ஆனாலும் சில மனச்சாட்சியுள்ள செற்காரர், பதுக்கி வைக்காமல் தங்கட கையிருப்பு முடியும் மட்டும் பெற்றோல் அடிச்சவை. அதால பெற்றோல் குடுத்த ஒண்டிரண்டு பெற்றோல் செற்றுகளில விடிய விடிய கியூவில நிண்டுதான் கனபேர் பெற்றோல் அடிச்சவை.

வருசப்பிறப்புக்கு செய்ய வேண்டிய வேலையெல்லாம் விட்டிட்டு, சனங்கள் பெற்றோலுக்காக இப்பிடி சாமம் ஏமத்தில கியூவில நிக்குதெண்டு கூட பதுக்கல் செற்காரருக்கு இரக்கம் வரேலை. அவையள் எல்லாத்தையும் பூட்டிக்கட்டிப் போட்டு, அடுத்தநாள் எவ்வளவு லாபம் வருமெண்ட கனவில மிதந்து கொண்டிருந்தவை. விடிய விலையேத்தின செய்தி வந்தவுடன, ஒரு பெரிய அதிசயம். அதுமட்டும் ஒரு சொட்டுப் பெற்றோலும் இல்லாத செற்றுகளிலையெல்லாம் மகாவலி கங்கை மாதிரி! பெற்றோலும், டீசலும் ஊற்றெடுக்கத் தொடங்கிட்டுது எண்டாப் பாருங்கோவன். பவுஸர் கூட வராமல் எப்பிடி பெற்றோல் வந்தது எண்டு ஆருக்கும் தெரியேலை. ஒருவேளை இந்தப் பெற்றோல் செற்றுகளுக்கு கீழ எண்ணெய்க்கிணறு ஏதும் இருக்குமோ?




-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## ரிஷபம்



பிறர் செய்ய முடியாத சவாலான காரியங்களை சாதித்துக் காட்டுவதில் வல்லவர்களான நீங்கள், சிறந்த பேச்சாளர்கள். சுற்றியிருப்பவர்களின் சுகத்துக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் நீங்கள், பல நேரங்களில் தாமரை இலைத் தண்ணீர் போல் இருப்பீர்கள். உங்கள் ராசியை சுக்ரனும், புதனும் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பணவரவும் அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் கைகூடும். வாகனம் வாங்குவீர்கள். பாதியிலேயே நின்ற வீடு கட்டும் பணி இனி தொடங்கும்.

உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்த ஆண்டு பிறப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிரபலங்களின் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். பணம் வரத் தொடங்கும். வழக்கு சாதகமாகும்.

வருடம் பிறக்கும் போது ராசிக்கு 8ல் செவ்வாய் மறைந்திருப்பதால் சின்னச் சின்ன விபத்துகள் வரும். முன்கோபம் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் மனக்கசப்புகள் வரும். சொத்துப் பிரச்சினை ஏற்படலாம். 30.4.2024 வரை குரு 12ம் வீட்டில் இருப்பதால் சின்னச் சின்ன செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். ஆக்கபூர்வமான பணிகளுக்காக வெளியிலும் கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை நல்லவிதத்தில் முடியும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அமையும்.

1.5.2024 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்குள்ளேயே குரு அமரப் போகிறார். எனவே உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். யாரையும் நம்பி பெரிய முடிவுகள் எடுக்காதீர்கள். எதற்கெடுத்தாலும் கோபப்படுவதெல்லாம் இனி கூடாது. உணர்ச்சிவசப்படாமல் எந்த முடிவும் எடுப்பது நல்லது.

இந்த ஆண்டு முழுவதும் ராகு பகவான் உங்கள் ராசிக்கு 11ம் வீட்டில் நிற்பதால் பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி காண்பீர்கள். கடனாக கொடுத்த பணம் கைக்கு வரும். சகோதர- சகோதரிகள் பாசமாக நடந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும்.

கேது பகவான் உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் இந்த ஆண்டு முழுக்க தொடர்வதால் பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும். அவர்களின் உயர்கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய்மாமன் வகையில் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும்.

இந்த ஆண்டு முழுவதும் சனிபகவான் உங்கள் ராசிக்கு 10ம் வீட்டில் தொடர்வதால் உங்களின் திறமைகள் வெளிப்படும். பணபலம் கூடும். பொது விழாக்கள், கல்யாண, கிரஹப்பிரவேச சுபநிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். திடீர் திருப்பங்கள் ஏற்படும். நட்பு வட்டம் விரியும்.

**வியாபாரிகளே!**

இந்த வருடத்தின் முற்பகுதி அமோகமாக இருக்கும். புது முதலீடு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். புது கிளைகள் தொடங்குவீர்கள். பற்று வரவும் உயரும்.

**உத்தியோகஸ்தர்களே!**

இந்த வருடத்தின் தொடக்கத்தில் இருந்து உங்கள் கை ஓங்கும். பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் சம்பள உயர்வு, பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். சிலருக்கு புது வேலை அமையும்.

இந்த ஆண்டு எதிர்பாராத திருப்பங்களையும், சமூகத்தில் பெரிய அந்தஸ்தையும் அமைத்துத் தருவதாக இருக்கும்.

# ஜப்பானில் நில அதிர்வு

டோக்கியோ, ஜன. 2

ஜப்பானில் வட மத்திய பகுதியில் நேற்றுக் காலை 7.4 ரிக்டர் அளவில் பெரும் நிலநடுக்கம் பதிவானது.

இஷிகாவா, நிகாட்டா மற்றும் டோயாமா ஆகிய பிரதேசங்களுக்கு ஜப்பானின் வானிலை ஆய்வு மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்தது.

ஹோன்ஷி அருகே 13 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் 5 மீற்றர் உயரத்திற்கு கடல் அலைகள் எழும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கொரோனா வேகம்

சென்னை, ஜன. 2

தமிழகத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 841 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் 4 ஆயிரத்து 309 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

இதேபோல் தமிழ்நாட்டிலும் கொரோனா பாதிப்பு மீண்டும் மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 44 வயது பெண் மணி ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார். (எ-இ)

# 52 ஆண்டுகளின் பின் பதவி விலகும் ராணி!

லண்டன், ஜன. 2



ஐரோப்பாவில் நீண்ட காலம் அரசராக இருந்த டென்மார்க்கின் ராணி இரண்டாம் மார்கிரேத், 52 ஆண்டுகளுக்கு பின்னர் ஜனவரி 14ஆம் திகதி அரியணையில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

1972ஆம் ஆண்டு அரியணை ஏறிய 83 வயதான ராணி, தனது பாரம்பரிய புத்தாண்டு உரையின் போது இந்த அறிவிப்பை வெளியிட்டார். "இதுதான் சரியான நேரம் என்று நான் முடிவு செய்துள்ளேன். பதவியேற்ற 52 ஆண்டுகளுக்கு பின்னர் ஜனவரி 14 திகதிஆம் டென்மார்க் ராணி பதவியில் இருந்து விலகுவேன். எனது அரியணையை என் மகன் பட்டத்து இளவரசர் ஃபிரடெரிக்கிடம் விட்டுச்செல்கின்றேன்" என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். செயல்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் நலனில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் பணவரவு ஏற்பட வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் செலவுகளுக்கு வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது உரிய கவனம் தேவை. வழக்கமான பணிகளிலும் எச்சரிக்கை அவசியம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற் பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.. குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத் துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** செயல்கள் அனுகூலமாகும் நல்ல நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** சோர்வு நிறைந்திருக்கும். புதிய முயற்சிகளை தொடங்கு வது நல்லது. தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கையைச் சூழும் இருள்

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு என்பவற்றின் விலையேற்றத்தோடு புலர்ந்திருக்கிறது 2024 ஆம் ஆண்டின் முதல்நாள். இந்த விலையேற்றங்கள் இலங்கையர்களுக்கு 2024 ஆம் ஆண்டு எப்படி அமையப்போகின்றது என்பதை துலாம்பரப்படுத்தி நிற்கின்றது. உண்மையில் பொருளாதார நெருக்கடி நிலவிய கடந்த இரு வருடங்களைவிடவும் இந்த வருடமே அதிக சவால்களையும், வாழ்க்கைச் சுமையையும் உண்டுபண்ணப்போகின்றது. ஏனெனில் பொருளாதாரநெருக்கடியில் இருந்து மீள்வதற்காக விஷத்தைக்கூட குடிப்பதற்குத் தயாராக இருந்த இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணயநிதியத்திடமும், இந்தியா, சீனா, அமெரிக்கா என்று உலகநாடுகளிடமும் வாங்கிய கடன்களின் விளைவுகளெல்லாம் திரண்டு வந்து மக்களின் கழுத்தையே நெரிக்கப் போகின்றன.

கடந்தகாலங்களைப் போலல்லாது, இம்முறை வாங்கிய கடன்களின்போது இலங்கைக்கு மிகக்கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் கடன் வசூலிப்பை மாத்திரம் இலக்காகக் கொண்டிருக்கவில்லை. மக்களின் மீது நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு விதமான வரிவிதிப்புகளை இறுக்கமாக்கும் நோக்கத்தையே அந்த நிபந்தனைகள் அதிகளவில் உள்ளடக்கியிருந்தன. அந்த நிபந்தனைகளே இன்று வெவ்வேறு வரிகளின் பெயரால் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன. இந்த வரிகள் சங்கிலித் தொடர் போல ,முடிவிலியான தாக்கங்களை நிகழ்த்தவல்லன. இப்போது எரிபொருள், எரிவாயு, பாண், பஸ் கட்டணம் என்று ஏறத்தொடங்கிய விலைவாசி இனிமேல், சகல பொருள்களிலும், சேவைகளிலும் தன் ஆரோகண சுருதியை உச்சஸ்தாயிக்குக் கொண்டு சென்றபின்னரே ஓயும். இப்போதே தள்ளாடிக்கொண் டிருக்கும் மக்களின் நிலை, விலைவாசி இன்னும் உச்சத்துக்குப் போனால் அதை எவ்வாறு தாங்கிக் கொள்ளமுடியும்? எதற்கும் ஓர் எல்லையுண்டு. ஒருகட்டத்துக்கு மேல் வாழ்வர்தாரச் சுமையைத் தாங்கமுடியாமல் போனால், மக்கள் பழையபடி வீதிக்கு இறங்கவே செய்வர். ஆனால், இம்முறை 'அரகலயவைப்' போல ஆயிரம் மடங்கு வீரியத்தோடு போராடினால்கூட, எதையும் மாற்றவோ சாதிக்கவோ முடியாது என்பதுதான் யதார்த்தம். அரகலயவின்போது அரசாங்கத்துக்கு எதிராக நின்ற நாடுகள் எல்லாம், இப்போது ரணிலுக்கு ஆதரவாக இருக்கின்றன என்பதே இதற்கான வெளிப்படைக்காரணம்.

அதேபோன்று இந்தியா, சீனா என்பன தாம் வழங்கிய கடனுக்குப் பதிலாக வேறுநலன்களையே எதிர்பார்க்கின்றன. குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தில் இவ்விரு நாடுகளும் தமது பிடியை இறுக்குவதற்காக இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் குந்திக்கொள்ளவே விரும்புகின்றன. நக்குண்டார் நாவிழந்தார் என்பதைப் போலவே இலங்கையும் கைநீட்டிக் கடன் வாங்கிய குற்றத்துக்காக, சீனா, இந்தியா என்பன கேட்கும் இடங்களையெல்லாம் வாரிவழங்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் வளங்கள் கொட்டிக்கிடக்கும் இடங்களையே இந்த நாடுகள் தமது கைப்பிடிக்குள் போட்டுக்கொள்ள நினைக்கின்றன. அந்த வளங்கள் சுரண்டப்பட்டுவிட்டால், ஒருகாலத்தில் இலங்கை குறித்த வளங்களின் துணையோடு மீளெழ முயற்சிப்பதும் முயற்கொம்பாகிவிடும். எந்தப்பக்கம் பார்த்தாலும் இலங்கையை இருள் மேகங்கள் மட்டுமே சூழ்ந்துகொண்டிருக்கின்றன. தெளிவான, தொலைநோக்கான முடிவெடுக்கும் புதியதொரு அரசாங்கம் விரைவில் அமையாவிட்டால், இந்த இருள் இலங்கையை விட்டு விலகாமலே போய்விடக் கூடும்.




# கடற்றொழிலாளர்களுக்குள் அமைச்சர் டக்ளஸால் பிளவு

## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜன. 2**

**வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தற்போது சிதைக்கப்படுகின்றது. கட்சி மயப்படுத்தப்படுகின்றது. அது தவிர மத்திய அரசாங்கத்தால் தனியாக கடற்றொழிலாளர்களுக்கான இன்னுமொரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர் சமூகம் தற்போது கடற்றொழில் அமைச்சரால் பிளவுபடுத்தப்பட்டு வருகிறது எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்றொழிலாளர் சமூகம் ஒற்றுமையாகவிருந்தால், கடற்போக்குவரத்து அவர்களின் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்தும் இருந்தால் மீண்டும் விடுதலைப் போராட்டம் முளைவிடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். இதனால்தான் அவர்களின் ஒற்றுமை சீர்குலைக்கப்படுகின்றது. எங்கள் கடல் வளத்தை சூறையாடுவதற்கு எவரையும் அனுமதிக்க முடியாது. மணலைக் கிள்ளி வியாபாரம் செய்தவர்களுக்கு கடலைத் திறந்து விடுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கமுடியாது. விவசாயத்தில் ஒற்றையினப் பயிர்ச் செய்கை எவ்வாறு சூழலுக்குக் கேடானதோ அதேபோன்று கடலில் ஒற்றையின உயிரின வளர்ப்பான கடலட்டை சூழலுக்கு மிகவும் பாதகமானது. கடலட்டைகளுக்கு இராசாயனங்கள் தேவை. நாங்கள் எங்கள் உள்ளூர் மீனினங்களை, உயிர்ப் பல்வகைமையைச் சிதைப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் - என்றார். (ம-66)

# கிழக்குக்கு ரூ.48,223 மில்.

கொழும்பு, ஜன.2

2024ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண வளர்ச்சி, மேம்பாடு மற்றும் அபிவிருத்திகளுக்காக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 48 ஆயிரத்து 223 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தில் ஆளுநர் நேற்றுக் கையொப்பமிட்டார். (எ-இ)

# 2024இல் மாற்றம்

## மல்கம் ரஞ்சித் நம்பிக்கை

கொழும்பு, ஜன.2



2024ஆம் ஆண்டு இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வாய்ப்புள்ளது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கையானது சரியான தலைமைத்துவம் இல்லாமல் ஒவ்வொரு பக்கமாகச் செல்லும் கப்பல் போன்றுள்ளது. இந்நிலைமை இவ்வாண்டு மாறவேண்டும் எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறியுள்ளார்.

இலங்கையின் தலைமைத்துவம் நேர்மையாகச் செயற்படவில்லை. அதனால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# 1.5 மில்லியன் சுற்றுலாவிகள்

2023ஆம் ஆண்டில் மட்டும் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற 2023ஆம்ஆண்டுக்கான அரசாங்கத்தின்இலக்கை விட 12 ஆயிரத்து 697 குறைவாக உள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## நாளை

03.01.2024

**புதன்கிழமை**

**மார்கழி 18**

சுபநேரம் : 05.00 - 06.30

ராகுகாலம் : 12.30 - 02.00

## நாளொரு நல்வார்த்தை

**உண்மையான வாழ்க்கை என்பது மற்றவர்களுக்காக வாழ்வது.**

– புரூஸ் வீ –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று அரசியல் கூட்டணி உருவாக்கும் முயற்சி தீவிரம்


**கொழும்பு, ஜன.2**
**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீது அதிருப்தியடைந்த ஆளுங்கட்சி உறுப்பினர்களின் புதிய மாற்று அரசியல் கூட்டணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அந்தக் கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.**

நாட்டையும், மக்களையும் நேசிக்கும் தலைவரை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதே எமது கூட்டணியின் பிரதான நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இதில் பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.
இவர்கள் அனைவருமே அரசியலுக்கு அப்பால் நாட்டையும் மக்களையும் நேசிப்பவர்கள். அடுத்து வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் எமது அரசியல் கூட்டணி சிறப்பாகச் செயற்பட்டு சிறந்த ஒரு தலைவரை நாட்டுக்காகத் தெரிவுசெய்ய பங்களிப்புச் செய்யும் என்று அவர் கூறியுள்ளார். (எ-இ)



# பொன்னாவெளியில் தொடர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 2
கிளிநொச்சி - பூநகரி, பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் பொதுமக்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் 150ஆவது நாளைக் கடந்துள்ளது.
பொன்னாவெளி கிராமத்தில் சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் கடல்நீர் உட்புகும், விவசாய நிலங்கள் உவர்நீராக மாறும், கால்நடைகளுக்கு உரிய மேய்ச்சல் தரவைகள் இல்லாமற் போகும், அயல் கிராமங்களும் அழிவடையும் என்று தெரிவித்தே சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைக்கு பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படக்கூடாது என்று பொதுமக்கள் ஆரம்பித்த போராட்டம் 150 ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்றது. (ம-13)



## கூட்டணி பேச்சுகளில் ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஜன.2
2024ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களை மையப்படுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பரந்துப்பட்ட கூட்டணியை அமைப்பதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளது.
அதற்கான அங்கீகாரத்தை மத்திய செயற்குழு வழங்கியிருந்தபோதிலும் சில நபர்களை இணைத்துக்கொள்வதில் சிக்கல்களை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்கொண்டுள்ளது. ஏற்கனவே கூட்டணி யிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் புதிதாக இணைத்துக் கொள்ளும் தரப்பு கள் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டுள்ளமையே அதற்குக் காரணம்.
ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்று சுயாதீனமா கச் செயற்படும் டலஸ் அழகப்பெரும, ஜீ.எல்.பீரிஸ், விமல் வீரவன்ஸ, சரித ஹேரத் மற்றும் உதய கம்மன்பில உள்ளிட்ட 13 பேர் கொண்ட குழுவுடன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றது. (எ-இ)

# மக்கள் எதிர்ப்புகளை மீறி திட்டங்களைத் திணிக்காதீர்!

### பேசாலை பங்குத்தந்தை வலியுறுத்து

மன்னார், ஜன.2
அபிவிருத்தி என்ற போர்வையில் பேசாலை கிராமம் அழிவை நோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது. இங்குள்ள மக்களின் விருப்பத்தைக் கவனத்தில் எடுக்காமல் செயற்படுவது சிறப்பானது அல்ல என்று பேசாலை பங்குத்தந்தை அருட்பணி எஸ்.அன்ரன் அடிகளார் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அண்மைக்காலமாக இந்த பேசாலை கிராமம் மழைகாலங்களில் வெள்ளத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதான வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டபோது, சரியான திட்டமிடல் இன்றி அமைக்கப்பட்ட வாய்க்கால்களும், உள்ளக வீதிகள் சீரமைக்கப்படாமல் இருப்பதும் இதற்குக் காரணம்.
தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம், கனியவள மணல் அகழ்வு போன்றவற்றாலும் பேசாலை கிராமம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்களின் விருப்பம் இன்றி எந்தச் செயற்பாட்டையும் மேற்கொள்ளவேண்டாம் என்று மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (எ-60)

# வாக்காளர் பதிவு இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன.2
2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருந்தது. ஆயினும், 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால் அந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## பளை விபத்து:

# எதிரேவந்த மோ.சைக்கிளே லொறியுடன் மோதியது

யாழ்ப்பாணம், ஜன. 2
பளை, இந்திராபுரம் சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில், ஒருவர் உயிரிழந்தார்.
இந்த விபத்து லொறி வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் ஏற்படவில்லை என்றும், எதிரேவந்த மோட்டார் சைக்கிளே லொறியுடன் மோதியதால் விபத்து சம்பவித்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
லொறியின் பின்பக்கப் பகுதியுடனேயே மோட்டார் சைக்கிள் மோதுண்டுள்ளது. விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இறந்தவர் வாகனத் திருத்தகத்தில் பணியாற்றுபவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# யாழ். நகர அபிவிருத்திக்கு 7 அபிவிருத்தித் திட்டங்கள்

### நகர அதிகாரசபை முன்மொழிவு கூட்டத்தில் ஒப்புதலில்லை

யாழ்ப்பாணம், ஜன.2
யாழ்.மாவட்டத்தின் நகர அபிவிருத்திக்காக - 2033 இல் வினைத்திறன் மிகு பொருளாதாரச் சூழலை ஏற்படுத்தும் முகமாக- முன்னெடுக்கப்படவுள்ள 7 திட்டங்கள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்மொழிந்துள்ளது.
இந்தக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.
இதில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் ஒரு பகுதியை நகரவிருத்திக்காகப் பயன்படுத்தல், காங்கேசன்துறைப் பகுதியில் பிராந்தியப் பூங்கா ஒன்றை நிறுவுதல் , ஊர்காவற்றுறைப் பகுதியில் மாதிரி முதியோர் கிராமம் ஒன்றை அமைத்தல் , மண்டைதீவுப் பகுதியில் முதியவர்களுக்கான ஓய்வுப் பகுதியை உருவாக்குதல், பருத்தித்தீவில் 10 ஏக்கர் நிலப்பரப்பல் சூழலுக்கு இசைவான சுற்றுலாத் திடலை உருவாக்குதல், ஊர்காவற்றுறை இறங்குதுறைப் பகுதியில் பல்வசதிகளைக் கொண்ட சுற்றுலா ஓய்வுப் பகுதியை நிறுவுதல், செம்மணிப் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைத்தல், நெடுந்தீவு விருத்தி என 7 திட்டங்கள் முன்மொழியப்பட்டன.
எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், "இந்த மிகப்பெரிய திட்டங்கள் தொடர்பில் அலசி ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்க முடியும். பிரதேசத்தின் காணிகள் சார்ந்த விடயமாக இருப்பதால் மக்களுடனேயே முதலில் கலந்துரையாடப்படவேண்டும்" - என்று தெரிவித்தனர். (ச-125)



# நால்வரின் உடல்கள் மீட்பு

கொழும்பு, ஜன.2
நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்டனரென சந்தேகிக்கப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங்கள், மாலபே, காஹறன் தொட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.
35 வயதுடைய தாய், 9 மற்றும் 7 வயதுகளுடைய இரு மகன்மார் மற்றும் 6 வயதுடைய மகள் ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். பெண்ணின் கணவர் கடந்த 28 ஆம் திகதி நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் நடந்துள்ளன.
கணவரின் உயிரிழப்பால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக மனைவி பிள்ளைகளுக்கு நஞ்சை கொடுத்து, தானும் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிடுகின்றனர். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

## அமரர் மயிலு சத்தியநாதன்

(துரை வடிவேல்)



(யாழ் போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற. ஊழியர். சமாதான நீதவான். வடமராட்சி தெற்கு. மேற்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்)

கடந்த 04.12.2023 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் மயிலு - சத்தியநாதன் (துரை வடிவேல்) அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (03.01.2024) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கரணவாய் வடமேற்கு. நாச்சிமார் கோவிலடி.

மனைவி - வள்ளிக்கொடி,
பிள்ளைகள் - சத்தியராஜ் (பிரான்ஸ்)
சத்தியப்பிரபா - சத்தியப்பிரதா
சத்தியரேகா, சத்தியராம்.

077 235 0612, 077 146 0178

# முதலாம் ஆண்டு நினைவுநாள்



மண்ணில் 13.02.1952 — விண்ணில் 13.01.2023

## அமரர் கந்தசாமி இராசமணி

(02.01.2024 செவ்வாய்க்கிழமை)

அன்பே உருவான கருவில் அவதரித்து
இன்பம் தழைத்தோங்க இன் முகத்தால் வரவேற்று
பண்பை பணிவை பார் போற்றும் உழைப்பை
எமக்கு புரியவைத்து - அன்பாய்
ஒரு கொடியின் மலர்களாய்
அவனியிலே இன்புற்று
வாழ்வாங்கு வாழ்ந்து - இன்று
காலன் உமை அழைத்திட
எங்கு சென்றீர் சென்ற வழி
தேடுகிறோம் வருவீரோ எம் மனக் குறை தீர்க்க


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இராசவனம்,
ஆவரம்பிட்டி, கொற்றாவத்தை.

குடும்பத்தினர்

(cs.26580) (N - 1)

# மரண அறிவித்தல்



## துரையப்பா மங்கையற்கரசி

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரம் புங்குடுதீவு மற்றும் கல்லூரி ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வி துரையப்பா மங்கையற்கரசி நேற்றுமுன்தினம் (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், இராஜேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற வசந்தகுமார் (அப்பு வாத்தியார் - ஓய்வுநிலை ஆசிரியர்), மற்றும் குணசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரிதிரேஸ் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற விஜயரெத்தினம் ஆகியோரின் மைத்துனியும், அபராஜ் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர்), பெனெற் பிருதிவிறாஜ் ஆகியோரின் மாமியாரும், அன்ரன்றாஜ்யின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(cs 53360) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்
077 2359155

# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 03 . 1963 — உதிர்வு 01 . 01 . 2024



## திருமதி சிவஞானசிங்கம் கமலராணி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானசிங்கம் கமலராணி அவர்கள் நேற்று (01.01.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவஞானசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும், முத்துராசா பாக்கியம் தம்திகளின் அன்பு மருமகளும், குகதாஸ் (கனடா), இராசபவானி (கோண்டாவில்), புஸ்பராணி (கனடா), காலஞ்சென்ற சிவதாஸ் (வவுனியா), மோகனதாஸ் (கனடா), காலஞ்சென்ற விஜயதாஸ் (கனடா), முருகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராஜலிங்கம் (கொழும்பு), சக்திவேல் (கனடா), கனகலிங்கம் (ஜேர்மனி), புவிராஜசிங்கம் (கனடா), காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோகுலராஜ் விதுனா (Dispenser Thellipalai), விபிசாந் (Civil Engineer, Singapore), விஸ்னுசாந் (Software Engineer) ஆகியோரின் பாசமிகு தாயும், கோகுலராஜ் (Technical Assistant) இன் அன்பு மாமியும், ஆத்விகாவின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 01.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


077 819 1061 விஸ்னுசாந்
(மகன்)

(CS 41436) S-1

தகவல்:
குடும்பத்தினர்.
இணுவில் தெற்கு,
இணுவில்.

# மரண அறிவித்தல்

மலர்வு 21 . 05 . 1959 — உதிர்வு 01 . 01 . 2024



## பொன்னுத்துரை மனோறஞ்சிதன் (றஞ்சன்)

(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர், லக்சுமி போட்டோ - சுன்னாகம்)

கொல்லங்கலட்டி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சோடா கம்பனி வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மனோறஞ்சிதன் அவர்கள் நேற்று (01.01.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னுத்துரை மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா தனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பஞ்சனாதேவியின் பாசமிகு கணவரும், லதாங்கினியின் அன்புத் தந்தையும், மனோகுமார் (மனோ போட்டோ - சுழிபுரம்), மனோராஜன் (கனடா), மனோகரன் (மனோகரன் களஞ்சியம் - சுழிபுரம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாலினி (ஆசிரியர் - யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.), சுமதி (கனடா), வரகனி (ஆசிரியர் - யா/பண்ணாகம் மெய்கண்டான்) ஆகியோரின் மைத்துனரும், மதுஷன், மதுஷாளினி, பிரவீனா (கனடா), தூஷகரி, கஜானகரி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 01.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

077 942 4207 (மனைவி)
077 640 2075 (சகோதரன்)
077 223 1294 (சகோதரன்)

(CS 53363) S-1

தகவல்:
குடும்பத்தினர்.
சோடா கம்பனி வீதி,
மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு கடமை ஆரம்பிப்பு

**ஆங்கில ஆசிரியர் [பெண்]/ கணக்கு பதிவாளர் [பெண்] தேவை**

**திருநெல்வேலி சிமாட்கிட்ஸ்**

முன்பள்ளிக்கு
ஆங்கில ஆசிரியர் (பெண்) தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

திருநெல்வேலி சிமாட்கிட்ஸ், ஆடியபாதவீதி, திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு:- 077 386 7458

யாழ்ப்பாணம், ஜன. 2

2024 புதிய ஆண்டில் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முதல் நாளான நேற்றுத் திங்கட்கிழமை காலை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அனைத்து உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ வைபவம் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. (ஒ-66)



## டெங்கு ஒழிப்பு

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் பி.ப. 3 மணி வரை ஜே/226 கிராம அலுவலர் பிரிவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ-66)




## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்

**ரவீந்திரன் பிரசன்னா**

நேற்று (2024.01.01) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மயிலிட்டி உப அலுவலகம்.**

(cr 41432) (N.I)

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்

**ரவீந்திரன் பிரசன்னா**

நேற்று (2024.01.01) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

(cr 41432) (N.I)

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்திலிருந்து (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 க்கு மல்லாவி வந்த தனியார் பஸ்ஸிலிருந்து சாம்பல் நிற பாடசாலை பையும் அதற்குள் உயர்தரம் உயிரியல் பாட கொப்பிகளும் அடுக்கப்பட்டுள்ளது. யாராவது மாறி எடுத்திருந்தால் தயவு செய்து

தொ.பே. :- 077 761 9048

என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு கொடுத்துதவுங்கள்
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
இந்திரபாலா.

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்
## பொது அறிவித்தல்
## மயானங்களில் பூதவுடல்களினை தகனம் செய்வதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்ளல்

1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்திற்கு அமைவாகவும், வடக்கு மாகாணசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2016.02.02 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1952/ 16 ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வடக்கு மாகாணசபையினால் வெளியிடப்பட்ட பிரதேசசபைகளுக்கான நியமத் துணைவிதிகளிற்கு அமைவாகவும், வலிகாமம் கிழக்கு பிரதேசசபையால் இந் நியம துணைவிதிகளினை ஏற்றுக்கொண்டு வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 21.07.2017 ஆம் திகதிய 2029/2017 இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாகவும் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பொது மயாணங்களில் 2024.01.01 திகதி முதல் பூதவுடல்களை தகனம் செய்வதற்கு அல்லது புதைப்பதற்கு பிரதேசசபையில் பின்வரும் அடிப்படையில் உரிய கட்டணத்தினைச் செலுத்தி முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மேலும் இச்சட்ட ஏற்பாடுகளை மீறுகின்றவர்களுக்கு எதிராக 1987 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவிற்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**பூதவுடலை தகனம் செய்வதற்கு அல்லது புதைப்பதற்கான கட்டண விபரம்**


| | விபரம் | கட்டணம் |
|---|---|---|
| 1 | வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலை தகனம் செய்வதற்கு - | ரூபா 2000.00 |
| 2 | வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் (12 வயதுக்குட்பட்டவர்கள்) பூதவுடலை தகனம் செய்வதற்கு | ரூபா 1000.00 |
| 3 | வலிகாமம் கிழக்கு பிரதேசத்திற்கு வெளியே வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலை தகனம் செய்வதற்கு | ரூபா 3000.00 |
| 4 | வலிகாமம் கிழக்கு பிரதேசத்திற்கு வெளியே வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் (12 வயதுக்குட்பட்டவர்) பூதவுடலை தகனம் செய்வதற்கு | ரூபா 1500.00 |
| 5 | வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வதியும் சமுர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரின் பூதவுடலை தகனம் செய்வதற்கு | ரூபா 1000.00 |
| 6 | வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வதியும் சமுர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரல்லாதவரின் (12 வயதுக்குட்பட்டவர்) பூதவுடலை தகனம் செய்வதற்கு | ரூபா 500.00 |
| 7 | பூதவுடலினை புதைப்பதற்கான கட்டணம் | ரூபா 3000.00 |
| 8 | இறந்த கால்நடைகளை புதைப்பதற்கான கட்டணம | ரூபா 3000.00 |

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் மயானம் அமைந்துள்ள பகுதிக்குரிய உப அலுவலகங்களில் கட்டணத்தினை செலுத்தி அனுமதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்**
02.01.2024

## மரண அறிவித்தல்

மலர்வு
20 . 11 . 1966



உதிர்வு
01 . 01 . 2024

## முத்தையா இராமநாதன் (கண்ணன்)

புங்குடுதீவு, 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சோலைபுரம், கொட்டடியை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா இராமநாதன் நேற்று (01.01.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சிவபாக்கியத்தின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை - சிவகாமசுந்தரியின் அன்பு மருமகனும், சிவாஜினியின் அன்புக் கணவரும், சறோஜினி (பிரான்ஸ்), விமலாதேவி, காலஞ்சென்ற சத்தியநாதன் (முத்தா - சுவிஸ்), சச்சிதானந்ததேவி, தவானந்தன் (லண்டன்), ஜீவானந்தன் (சுவிஸ்), பிரபா (தேவி படமாடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவதாசன், கவிதாசன், காலஞ்சென்ற கண்ணதாசன், றாயினி, சுகந்தினி (லண்டன்), ஜெயந்தினி, வரதராசன், பாரதிதாசன் (பிரான்ஸ்), பிறேமினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோலைபுரம்,**
**கொட்டடி.**

(CS 53362) S-1


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





தேசிய மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான mini throwball போட்டியில் பங்கேற்ற வவுனியா பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலையின் 13 வயதுப் பிரிவு ஆண்கள் அணி வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ச-75)





அராலி கிழக்கு கிராமத்தில் பொதுமக்கள் தன்னார்வமாக டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியை அண்மையில் முன்னெடுத்தனர். இதில் நூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று ஒவ்வோர் இடமாக கழிவுப் பொருள்களைச் சேகரித்து பிரதேச சபையிடம் ஒப்படைத்தனர். (ச-125)





இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு கடந்தசனிக்கிழமை நாவற்குழியிலுள்ள பிரசித்திபெற்ற திருவாசக அரண்மனையில் இடம் பெற்றது. சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-66-159)

இருபாலை கற்பகப் பிள்ளையார் முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் கலைவிழா அண்மையில் இருபாலையில் அமைந்துள்ள முழுமதி சனசமூக நிலைய அரங்கத்தில் முன்பள்ளி முகாமைத்துவத் தலைவி திருமதி வெ.அமிர்தாம்பிகை தலைமையில் சிறப்புற நடைபெற்றது. விழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-66)



மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளராக சேவையாற்றி மன்னார் உதவி மாவட்டச் செயலராக (காணி) நியமனம் பெற்றுள்ள மா.சிறிஸ்கந்தகுமாரை மன்னார் றோட்டரிக் கழகத்தினர் அண்மையில் சந்தித்துக் கௌரவித்தனர். (ச-213)




வடக்கு - கிழக்கு கிராமங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நிவாரணப் பொதிகள், மருத்துவக் கலாநிதி கந்தையா மோகனரூபன் அனுசரணையில் கையளிக்கப்பட்டன. தமிழ்விருட்சத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர மற்றும் மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஷ்குமார் ஆகியோர் பங்கேற்று உலர் உணவுப் பொதிகளைக் கையளித்தனர். (ச-110)



முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இருட்டு மடு கிராமத்தைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் புலம்பெயர் நாடான சுவிஸ் நாட்டில் இருக்கும் ஈசன் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கிராம சேவையாளர் உ.நாமிலா தலைமையில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் கலந்து கொண்டு உலருணவுப்பொதிகளை வழங்கினார். (ரி-19)



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பண்டாரக்குளத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் முதியவரொருவரின் குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய தாய்த்தமிழ்பேரவை அமைப்பின் ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்பாளர் இ.சத்தியசீலனின் ஏற்பாட்டில் மாதாந்தம் உணவுப்பொருள்கள் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-13)





முல்லைத்தீவு, முள்ளியவளை வடக்கு நாவற்காடு வீதி அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளது. சுமார் 400 குடும்பங்களின் தினசரிப் பாவனைக்குரியதாக இந்த வீதி உள்ளது. நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதிருந்த இந்த வீதி மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையின் விளைவாக, தற்காலிக அடிப்படையில் சீரமைக்கப்பட்டுள்ளது. (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலையத்தில் 30 கதிரைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 2

சுதுமலையிலுள்ள சனசமூக நிலையத்தின் 30 கதிரைகள் நேற்றுமுன்தினம் திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-125)

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி நடராஜா

திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி நடராஜா நேற்று (01.01.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பையா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், பூமணி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீஸ்கந்தராஜாவின் (ஸ்ரீமில்) பாசமிகு தாயாரும், ரஞ்சனியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமில்
303, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந.ஸ்ரீஸ்கந்தராஜா
(மகன்)

# வடமராட்சியில் வாடி எரிப்பு

பருத்தித்துறை, ஜன. 2

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் மீனவரின் வாடியொன்று தீயிட்டு நேற்று எரிக்கப்பட்டுள்ளது.

புதுவருடக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்கள் நேற்று மாலை 4.30 மணியளவில் வாடி எரிவதைக் கண்டு கடற்கரை நோக்கிச் சென்று தீயை அணைத்தனர்.

செல்வரத்தினம் சுதர்சன் என்பவருடைய வாடியும் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளுமே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளன.

முன்பகை காரணமாகவே வாடி எரிக்கப்பட்டுள்ளதாகவும், எரித்தவர் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும், பொலிஸார் அவரை விடுவித்துள்ளனர் எனவும் பாதிக்கப்பட்டவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-ஒ-27)

# திருடப்பட்ட சைக்கிள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 2

'நல்லூர் சிவன் கோவில்' என அழைக்கப்படும் சிறி கமலாம்பிகை சமேத சிறி கைலாசநாத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழாவில் திருட்டுப் போன துவிச்சக்கர வண்டி மீண்டும் கிடைத்துள்ளது.

கடந்த புதன்கிழமை காலை ஆலயத் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டிருந்த நல்லூரைச் சேர்ந்த பெண்மணி தனது துவிச்சக்கரவண்டியை ஆலயத்துக்கு அருகில் வீதியோரமாக நிறுத்திப் பூட்டி விட்டுச் சென்றுள்ளார். திருவிழாவில் கலந்து கொண்டு விட்டு மீண்டும் சென்று பார்த்தபோது துவிச்சக்கர வண்டி திருட்டுப் போயிருந்தது.

ஆலயத் தொண்டர்கள் சிவன் ஆலயத்துக்கு அண்மித்துள்ள வெறும் காணியொன்றில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அங்கு தகரத்தால் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் திருட்டுப் போன துவிச்சக்கரவண்டி மீட்கப்பட்டு பெண்மணியிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-66)

# யாழ். போதனாவுக்கு இன்சுலின் நன்கொடை



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்துக்கு 80 இன்சுலின் பேனைகள் அண்மையில் வழங்கப்பட்டன. புலம்பெயர் நாட்டில் வதியும் பொன்னுத்துரை விஜயேந்திரன் குடும்பத்தினரால் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக அவை வழங்கப்பட்டன. (ச-9)


## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - வடக்கு மாகாணம்

### தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2024

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில், அச்சுவேலி பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில், அளிஞ்சியன்குளம் பிரதேசத்திலும், வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும் காணப்படும் பிராந்திய கால்நடை இனவிருத்திப் பண்ணைகளில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக, தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

01. நியமிக்கப்படவுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை : 06

02. நியமிக்கப்படவுள்ள தொழிலாளர்களின் ஒப்பந்த காலம் : 1 வருடம்

03. ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்
   I. நன்நடத்தையுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
   II. அரச கால்நடைப் பண்ணை அல்லது கால்நடைத்துறை அலுவலகம் அல்லது அதுசார்ந்த வெளிக்களப் பணியொன்றில் முன்அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
   III. கல்வித் தகைமை : - க.பொ.த. சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்விற்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

04. அச்சுவேலி, அளிஞ்சியன்குளம், பூந்தோட்டம் ஆகிய பண்ணைகள் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். (வதிவிடம் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

05. விண்ணப்பிக்கும் முறை
   I. பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் எமது அலுவலகங்கள் அமைந்துள்ள அச்சுவேலி, அளிஞ்சியன்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.
   II. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2024.01.12 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு செய்தல் - 2024 என குறிப்பிட்டு மாகாணப் பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடமாகாணம் பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தகுதியானவர்களிற்கான நேர்முகத்தேர்வு பற்றிய விபரங்கள் எம்மால் அறியத்தரப்படும்

Dr.S.வசீகரன்
மாகாணப் பணிப்பாளர்.


## மரண அறிவித்தல்

### கந்தசாமி கிருஷ்ணலிங்கம்



ஈவினை மத்தியை பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருஷ்ணலிங்கம் அவர்கள் நேற்று (01.01.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசையா சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கோகுலின் அன்புத் தந்தையும், விஷ்ணுலிங்கம், தயாநிதி, இராசலிங்கம், கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலஷ்சுமி, மாங்களம், குமரகிரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
076 889 1112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீட்க சர்வகட்சிக் கூட்டம்

## மைத்திரி கோரிக்கை

கொழும்பு, ஜன. 2

நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என வலியுறுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருள்கள், சேவைகளின் விலைகள் வானுயர அதிகரித்துள்ளன. மக்கள்மீது பொருளாதாரச் சுமைகள் திணிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்த மக்களை மீட்பது பற்றி சிந்திக்கவேண்டும். அவ்வாறு இல்லையேல் கடும் அதிருப்தியில் மக்கள் எவ்வாறான முடிவை எடுப்பார்கள் எனத் தெரியவில்லை.

இந்நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்து நிலைமையைத் தெளிவுபடுத்தவேண்டும்.

நாட்டை மீட்பதற்கான அரசியல் வேலைத்திட்டமும், ஏனைய தரப்புகளின் வேலைத்திட்டங்களும் முன்வைக்கப்பட்டு காத்திரமான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

எந்தவொரு கட்சியாலும் தனித்துச் செயற்பட்டு இந்த நாட்டை மீட்க முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது. அனைத்துத் தரப்புகளும் வட்ட மேசைக்கு வந்து பேச்சு நடத்தி, இணக்கத்துக்கு வரவேண்டும். அவ்வாறு இல்லையேல் மக்கள் கிளர்ந்தெழுவார்கள் - என்றார்.

(அ-ஒ-44)

### எதிரணி...

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவர்கள் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

டிலான் பெரோ கூறும்போது; ஆளுங்கட்சியில் உள்ளவர்கள்கூட எதிரணிக்கு வருகின்றனர். ஏனெனில் மக்களின் தேர்வு எந்தப் பக்கம் உள்ளது என்பது அவர்களுக்குத் தெரியும். மக்களுக்காக எதிரணிக் கூட்டணியில் குறைந்தபட்ச புரிந்துணர்வுடனாவது இணையவேண்டும். நாம் அதனையே செய்துள்ளோம். அவ்வாறு இல்லாவிட்டால் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

நாடாளுமன்றத்தில் டலஸ் அழகப்பெருமவின் பெயரை பீரிஸ் முன்மொழிந்திருக்காவிட்டால் இன்று அவர்தான் பிரதமர் பதவியில் இருந்து இருப்பார். டலஸ் அமைச்சர் பதவியில் நீடித்திருப்பார். பதவிகளை விட்டுவிட்டுதான் நாம் வந்துள்ளோம். எதிரணிக் கூட்டணி என்பது பொது வேலைத்திட்டம். அதில் இணைவதால் கட்சிகளை கலைக்க வேண்டியதில்லை. எதிரணி பொதுவேட்பாளர் சஜித்தான் - என்றார்.

அதேவேளை, சஜித்தான் பொதுவேட்பாளர் என்பதை பீரிஸும் உறுதிப்படுத்தினார். (அ-ஒ-44)

### விமர்சனங்களை...

சிங்க உறுதியளித்தார். அதற்குத் தேவையான கடினமாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே நான் மேற்கொண்டுள்ளேன். நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்புகளை உணர்ந்து மற்றைய அரசியல்வாதிகளும் புதிய வருடத்தில் ஒன்றுபடுவர் என எதிர்பார்க்கிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பத்தரமுல்லை - அக்குரேகொடவில் புதிய விமானப் படைத் தலைமையகக் கட்டடத்தை நேற்று திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில்இதனைத் தெரிவித்தார்.

"பொருளாதார வேலைத்திட்டத்தை இரு வருடங்கள் காலம் தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டது. அரசியல் உறுதிப்பாடற்ற நிலைமையால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது.

இலங்கையில் 2023 ஆண்டு இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை, சரியான நேரத்தில் மேற்கொள்ளவேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதமாக இந்த ஆண்டு அமையும் என நம்புகிறேன். எதிர்காலத்தில் இந்தக் கடன்களைச் செலுத்தும் இயலுமை எம்மிடம் உள்ளதா என்பதே அவர்களின் கேள்வியாகவுள்ளது. அதனால் நாம் புதிய வருமான வழிமுறைகளைத் தேடிக் கொள்ளவேண்டும் - என்றார். (அ-ஒ-44)

### வடக்குக்கு...

நாளை மறுதினம் பி.ப. 3 மணி முதல் மாலை 5.30 வரை மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்குகொள்வார். அன்று மாலை 7 மணி முதல் 9.30 வரை சிவில் சமூகப் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திப்பார்.

மறுநாள் 5ஆம் திகதி காலையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும், பி.ப. 2 மணி தொடக்கம் 3 மணி வரையில் பூநகரிப் பிரதேச அபிவிருத்தி மற்றும் நகர மயமாக்கல் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிலும் அவர் கலந்துகொள்வார்.

6 ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணி வரையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக்கழக உப வேந்தர்கள் மற்றும் கிளிநொச்சி வளாகப் பீடாதிபதி உள்ளிட்ட விரிவுரையாளர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து, மு.ப.10 மணிமுதல் 11.30 வரையில் சர்வமதப் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். போதனா மருத்துவமனையின் நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் பி.ப. 3 மணி முதல் 5 மணி வரை யாழ். மாவட்டச் செயலகத்தில் நிபுணர்களுடனான சந்திப்பும், 7ஆம் திகதி தந்தை செல்வா மண்டபத்தில் பனை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது. (அ-ஒ-100)

### டெங்குத்...

களும் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்த டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 144 பேர் டெங்குத் தொற்றுடன் சிகிச்சைக்காக மருத்துவமனைகளை நாடியுள்ளனர். இதேவேளை - 2023 ஆம் ஆண்டு முழுவதும் 4 ஆயிரத்து 313 பேர் டெங்கு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆண்டின் மொத்த எண்ணிக்கையின் அரைவாசி டிசெம்பர் மாதத்திலேயே பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-125)

### எரிவாயு,...

92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 366 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 38 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 464 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 29 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 358 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 41 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 475 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதேவேளை - மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 11 ரூபாவால் குறைக்கப்பட்டு 236 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை லிட்ரோ எரிவாயு நிறுவனம் 12.5 கிலோவுடைய சமையல் எரிவாயுவின் விலையை 685 ரூபாவால் அதிகரித்து புதிய விலையாக 4 ஆயிரத்து 250 ரூபாவை நிர்ணயித்துள்ளது. 12.5 கிலோ கிராம் லாப்ஸ் எரிவாயுவின் விலை 755 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 4 ஆயிரத்து 740 ரூபா.

மேலும், 750 மில்லி லீற்றர் மதுபான போத்தலின் விலை 90 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சிகரெட்டின் விலை 5 ரூபா, 15 ரூபா, 20 ரூபா மற்றும் 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-44)

### 8 தடவைகள்...

தொடர்ச்சியாக சிகிச்சைபெற்று வந்தார். இந்நிலையில் நேற்றையதினம் புது வருடதினத்தில் ஆரோக்கியமான பெண் குழந்தையை ஒன்றைப் பிரசவித்தார். மகப்பேற்று மருத்துவர் சிவராஜா சிஜெதராவின் மருத்துவக்குழுவினரே தாய்க்குச் சிகிச்சை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

### நாட்டின்...

அந்தக் கட்சியின் மகளிர் அணி மாநாடு மாத்தறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ், வல்லபாய் பட்டேல் போன்றவர்கள் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தும் இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஒன்றுபட்டு போராடினார்கள். இவர்கள் கட்டி வளர்த்த ஒற்றுமை காரணமாக இன்று இந்தியா விண்வெளி ஆராய்ச்சில் ஈடுபடும் அளவுக்கு அபிவிருத்தியடைந்துள்ளது.

இலங்கையை ஒரு தேசமாகக்கருதி நாங்கள் சுதந்திரத்துக்காகப்போராடவில்லை. ஒரு இனத்தை மற்றைய இனத்துக்கு எதிராகத் தூண்டி விடும் செயற்பாடுகளையே மேற்கொண்டார்கள்.

குறுகிய காலத்தில் பதவிக்கு வருவதற்கு அவர்களுக்கு இது உதவியது. தேசிய அடையாளத்தைக் கட்டியெழுப்ப அவர்கள் முயற்சிக்கவில்லை. இது இன, மத வேறுபாடுகளைக்கொண்ட இலங்கையை உருவாக்கியது. இன்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு இதுவே தடையாக உள்ளது - என்றார். (அ-ஒ-6)

### திட்டங்களில்...

விருத்தி அதிகாரசபையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது.

காங்கேசன்துறையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. அதில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் எதுவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார். இதனையடுத்து தமது திட்ட வரைபடத்தில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயத்தை உள்ளடக்குவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்தனர். (அ-ஒ-125)

### கெஹலியவுக்கு...

சமூகச்செயற்பாட்டாளர்கள் சிலர் மலர்வளையத்துடன் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். வீட்டின் பாதுகாப்பு ஊழியர்கள், கெஹலிய வீட்டில் இல்லை என்று கூறியுள்ளனர். இதனையடுத்து வீட்டின் முன்பாக மலர்வளையத்தை வைத்து விட்டுச் சென்றுள்ளனர். அவர் வீட்டினுள் இருந்துகொண்டே இல்லை எனக் கூறியதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கெஹலிய சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் தரமற்ற மருந்துகள் இறக்குமதி காரணமாக உயிரிழப்புகள் ஏற்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-6)

### தனித்திருந்த...

சிலிண்டர் மற்றும் 3 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பதவியேற்றார் சத்தியசீலன்

கொழும்பு, ஜன.2
யாழ்ப்பாணம் - வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளராக சிவபாதசுந்தரம் சத்தியசீலன் நேற்றுக் காலை தனது கடமையை பொறுப்பேற்றார்.
நிகழ்வில் முன்னாள் பதில் பிரதேச செயலாளர் ச.சிவசிறி, உதவி பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-27-100)

## லலிதா மஹா யக்ஞம்

வட்டுக்கோட்டை, ஜன. 2
வட்டுக்கோட்டை, சித்தன் கேணிகாங்கேயன்பதி அருள் மிகு சிறி முத்துமாரி அம்மன் (சின்னம்மன்) தேவஸ்தானத்தில் சோபகிருது வருட லலிதா மஹாயக்ஞம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இன்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து அம்மன்அயல்கிராமத்திலிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று கற்பகபிள்ளையார் சந்நிதி ஊடாக ஆலயத்தை வந்தடைவார். (ஒ-இ)



## மாநகரசபையின் பவள விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.2
யாழ்ப்பாணம் மாநகரசபையின் 75ஆவது ஆண்டு பவளவிழா யாழ்ப்பாணம் மாநகரசபை முன்றிலில் நேற்று நடைபெற்றது.
மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் களாகப் பதவி வகித்த முன்னாள் முதல்வர்கள் நால்வர், முன்னாள் ஆணையாளர்கள், ஆணையாளர் ஆகியோருக்கு பவள விருதுகள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் யாழ். மாநகர செயலாளர் த.தயாளன், பிரதம கணக்காளர் திருமதி ம.வசந்தமாலா உள்ளிட்ட மாநகரசபை பதவிநிலை அதிகாரிகள், சுகாதாரப் பணியினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-20)

## அரசை விரட்டவே "குத்துக்கரணம்"

கொழும்பு, ஜன.2
மக்கள் கோரிக்கைக்கு செவிமடுக்காமல் பயணிக்கும் இந்த அரசை மாற்றவேண்டும். அதற்காகப் பெரும் அரசியல் சக்தி அவசியம். அதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையுடன் எனக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை. எனினும், தற்போதைய அரசை மாற்றுவதற்கு மக்கள் சக்தி அவசியம். மக்கள் ஆதரவு சஜித்துக்கு உள்ளது. எனவேதான் இந்த பொதுப்பயணத்தில் நானும் இணைந்தேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் மேலும் சில உறுப்பினர்கள் இணைவார்கள் என நம்புகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)



## கட்சி தாவலால் கடுப்பான மைத்திரி

கட்சி தாவும் அரசியல்வாதிகளுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. அடுத்த தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று இணைந்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு.
அரசியலில் அங்கும், இங்கும் கட்சி தாவும் சம்பவங்கள் தொடர்கின்றன. ஆனால் தேர்தலொன்றுக்குச் சென்ற பிறகு இவ்வாறு கட்சிதாவும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள். கட்சிதாவும் நபர்களுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. தாவியவர்களுக்கு கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது தெரியும். யார் வந்தாலும், போனாலும் நாட்டை மீட்க தெளிவானதொரு கொள்கை இருந்தால்போதும் - என்றார். (அ-ஒ-44)

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மின்சார உபகரணங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு ஆண்/ பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
075 944 8104 / 075 592 5371

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**
இல.158. 193 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
**ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி**



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 15.01.2024 வரையும் விசேட விலைக்குறிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

## மரண அறிவித்தல்

மலர்வு
20 . 07 . 1994



உதிர்வு
01 . 01 . 2024

**ரவீந்திரன் பிரசன்னா**
(வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர்)

மல்லாகம் சந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் பிரசன்னா அவர்கள் நேற்று (01.01.2024) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான ரவீந்திரன் மற்றும் அருட்செல்வியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், பாக்கியம் மற்றும் காலஞ்சென்றவரான சோமசுந்தரம் மற்றும் நவமணி தம்பதியரின் அன்புப் பேரனும் சியானி (ஜேர்மன்), நிஷானி, தனஞ்சயன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தஜநாதன் (ஜேர்மன்), கிறேஷன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யவின் (ஜேர்மன்), நவின் (ஜேர்மன்), ஶ்ருதிகா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாகம் சந்தி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 279 0594

ICS 27630 S-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org